"வாழக்கல்மின்"

# யா/பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை

## வல்வெட்டித்துறை

# வருடாந்த பரிசளிப்பு விழா - 2017

தலைவர்

**திரு.வீ.இந்திரலிங்கம் அவர்கள்**

அதிபர்

பிரதம விருந்தினர்

**Dr.கனகரத்தினம் சத்தியமூர்த்தி அவர்கள்**

பாடசாலையின் பழைய மாணவர்,

நிபுணத்துவ வைத்தியர்–முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை

பரிசில் வழங்குபவர்

**திருமதி.கஸ்தூரி சத்தியமூர்த்தி அவர்கள்**

ஆசிரியர்

**2018.01.17**

# பரிசளிப்பு விழா - 2017
# அதிபர் அறிக்கை

இன்றைய பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டிருக்கும் மதகுருமார்களே! பிரதம விருந்தினர், முல்லைத்தீவு பொது வைத்தியசாலையின் வைத்திய நிபுணரும் எமது பாடசாலையின் பழைய மாணவருமான வைத்திய கலாநிதி கனகரத்தினம் சத்தியமூர்த்தி அவர்களே! அவர்தம் பாரியார் ஆசிரியை திருமதி.கஸ்தூரி சத்தியமூர்த்தி அவர்களே! வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களே!, பிரதிக் கல்விப் பணிப்பாளர்களே! கோட்டக் கல்விப் பணிப்பாளர் அவர்களே! உதவிக் கல்விப் பணிப்பாளர்களே! பாடசாலை அதிபர்களே! ஓய்வு நிலை கல்வி அதிகாரிகளே! கல்விமான்களே! ஆசிரியர்களே! பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்களே! பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே! பெற்றோர்களே! பழைய மாணவர்களே! நலன் விரும்பிகளே! அன்பான மாணவர்களே! அனைவருக்கும் வணக்கம்!

இன்றைய பரிசளிப்புவிழா நிகழ்வின் பிரதம விருந்தினர் வைத்திய கலாநிதி கனகரத்தினம் சத்தியமூர்த்தி அவர்கள் பொலிகண்டியின் மைந்தனாக உதித்து எமது பாடசாலையில் 1985-1987 காலப்பகுதிகளில் தனது ஆரம்பக் கல்வியை மேற்கொண்டிருந்தார். தொடர்ந்து யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலையிலும் இடை நிலைக் கல்வியை யா/ஹாட்லிக் கல்லூரியிலும் பயின்று மருத்துவ பீடத்திற்குத் தெரிவாகி தனது மருத்துவப் பட்டப் படிப்பை நிறைவு செய்து, 2007-2008 காலப்பகுதிகளில் உள்ளக மருத்துவப் பயிற்சியை பூர்த்தி செய்திருந்தார். 2008 ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மருத்துவ உத்தியோகத்தராகத் தனது மருத்துவ சேவையினை ஆரம்பித்த இவர், 2010-2014 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் மருத்துவத் துறைசார்ந்த பட்டப் பின் மேற்படிப்புகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் தனது கடமைகளைத் தொடர்ந்ததோடு 2016ஆம் ஆண்டிலிருந்து முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் பொது வைத்திய நிபுணராகத் தனது சேவையை ஆற்றி வருகின்றார். அவரது துணைவியார் யா/குடத்தனை அ.த.க.பாடசாலை மற்றும் யா/கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை என்பவற்றில் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப பாட ஆசிரியராகத் தனது கடமைகளை ஆற்றி வருகின்றார். நற்பண்புகள் நிறைந்த பண்பாளனாக எல்லோராலும் பாராட்டப்படும் வைத்திய கலாநிதி க.சத்தியமூர்த்தி அவர்கள் எமது பாடசாலையின் பழைய மாணவர் என்பதிலும் இன்றைய நிகழ்வில் தனது பாரியார் சகிதம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டமையையிட்டும் பாடசாலைச் சமூகம் பெருமிதம் கொள்கின்றது.

எமது யா/பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலையானது, இப்பிரதேசத்தைச் சேர்ந்த பல சைவப் பெரியோர்களின் ஆதரவுடன் நிறுவப்பட்ட பொலிகண்டி சைவ வித்தியாபிவிருத்திச் சங்கத்தினால் 1957 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17ஆம் நாளில் ஸ்தாபிக்கப்பட்டது. அத்தோடு பல்வேறு தரப்பினரதும் ஒத்துழைப்போடு பாடசாலைக்கான அதிபர், ஆசிரியர்களையும் நியமித்து பாடசாலையை நிர்வகித்தும் வந்தது. இந்நிலையில் 1958 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து அரசின் உதவி பெறும் பாடசாலையாக உள்வாங்கப்பட்டதோடு, 1962 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 20ஆம் நாளில் முற்று முழுதானதோர் அரசாங்கப் பாடசாலையாக அரசினால் பொறுப்பேற்கப் பட்டது. தொடர்ந்து வந்த காலங்களில் பணியாற்றிவந்த 14 அதிபர்கள் மற்றும்

காலத்துக்குக் காலம் பணியாற்றிவந்த ஆசிரியர்களின் அளப்பரிய சேவைகளினாலும் அரசு, ஊரவர்கள், ஏனைய நலன் விரும்பிகள் காலத்துக்குக் காலம் வழங்கிய ஒத்துழைப்புக்களினாலும் இன்றைய நிலையை எட்டியுள்ளது.

நான் இப்பாடசாலையில் அதிபர் கடமையினை **2016.06.06** அன்று பொறுப்பேற்றதின் பின்னர் பாடசாலையில் நடைபெற்ற முக்கியமான நிகழ்வுகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

- பாடசாலையின் மிகமுக்கிய வரலாற்று நிகழ்வான வைரவிழா நிகழ்வுகள், **2017.01.17** அன்று பாடசாலைச் சமூகத்தின் அனைத்துத் தரப்பினரதும் பெரும் பங்களிப்புடன் மிகவும் சிறப்புற நடந்தேறியது. வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு.செ.உதயகுமார் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தார்.
- பாடசாலையின் கவின்நிலையை மேம்படுத்தும் பொருட்டு அலங்கார வளைவு ஓரங்களுடன் கூடிய பாடசாலை உள்ளக நடைபாதை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்டது.
- அழகிய மாடத்துடன் கூடிய சரஸ்வதி சொரூபம், அமரர் தங்கவேலாயுதம் சிவானந்தன் ஞாபகார்த்தமாக தங்கவேலாயுதம் அழகம்மா குடும்பத்திரின் நிதியுதவியினால் நிர்மாணிக்கப்பட்டு வைர விழாவன்று திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.
- பாடசாலையின் சகல கட்டடங்களும் மதில்களும் உள்ளும் புறமும் அழகிய வர்ணப்பூச்சிடப்பட்டு அழகுபடுத்தப்பட்டது.
- மிகவும் சிதிலமடைந்த நிலையில் நூலகத்திற்கு அருகில் இடையூறாக அமைந்திருந்த சிறிய கட்டடம் ஒன்று உரிய அனுமதி பெற்று அகற்றப்பட்டது.
- பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் **2017.02.10** அன்று நடைபெற்றிருந்தன. பாடசாலையின் பழைய மாணவரும் வடமராட்சி கல்விவலயத்தின் அன்றைய வலயக் கல்விப் பணிப்பாளருமான திரு.சி.புஸ்பலிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராக் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தார்.
- மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் விபரங்களைக் கணினிமயப்படுத்தி அவற்றினூடாக தரவுகளையும் மாணவர் தேர்ச்சி அறிக்கைகளையும் பெற்றுக்கொள்ளும் சிறப்பு அம்சங்கள் கொண்ட பாடசாலை முகாமைத்துவ மென்பொருள் "MY DYNAMICA" நிறுவனத்தின் அனுசரணையுடன் நிறுவப்பட்டு **2017**ஆம் ஆண்டு முதலாம் தவணை முதல் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டு வருவதோடு, மாணவர் தேர்ச்சி அறிக்கைகளை கணினிமயப்படுத்தி வழங்கும் முன்னணிப் பாடசாலைகள் வரிசையில் எமது பாடசாலையயும் இணைந்து கொண்டுள்ளது.
- ஆசிரியர்களின் அன்றாட வரவுகளை பதிவுசெய்யும் வகையில் கைவிரல் பதியும் இயந்திரத்தின் பாவனை வடமாகாணக் கல்வி அமைச்சின் அறிவுறுத்தலுக்கிணங்க **2017.04.26** அன்று முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.
- தரம் **8-11** வரையான வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்களும் அதிபர், ஆசிரியர்களும் **3** நாட்கள் கொண்ட கல்விச் சுற்றுலா ஒன்றினை **2017**, ஓகஸ்ட் **05, 06, 07** ஆம்

திகதிகளில் மேற்கொண்டிருந்தனர். இசுறுமுனி விகாரை, சிகிரியா, பின்னவல யானைகள் காப்பகம், பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் தாவரவியல் பூங்கா, றம்பொடை ஆஞ்சநேயர் கோயில், நுவரெலியா, ஹக்கல பூங்கா, தேயிலைத் தொழிற்சாலை ஆகியவற்றைப் பார்வையிட்ட அனுபவம் மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் மறக்கவியலாத சம்பவங்களாகும்.

- எமது பாடசாலைக்கான வலயமட்ட மேற்பார்வை 2017.07.13 அன்று நடைபெற்றிருந்தது.

- வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள வகை 2 பாடசாலைகளில் முதன்முதலாக எமது பாடசாலையில் நிறுவப்பட்ட திறன் வகுப்பறையினை (SMART Class Room) கடந்த 2017.11.21 அன்று கௌரவ மாகாணசபை உறுப்பினர்கள் திரு.க.தர்மலிங்கம் அவர்களும் திரு.ச.சுகிர்தன் அவர்களும் இணைந்து திறந்து வைத்தனர்.

  இதற்கான உபகரணங்கள் பின்வரும் வகையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

  01. SMART Interactive Board - கௌரவ. பாராளுமன்ற உறுப்பினர் M.A.சுமந்திரன் அவர்கள்.
  02. பல்லூடக எறியி - கௌரவ.மாகாணசபை உறுப்பினர் ச.சுகிர்தன் அவர்கள்
  03. எழுது பலகையுடனான கதிரைகள் - கௌவர மாகாண சபை உறுப்பினர் க.தர்மலிங்கம் அவர்கள்.
  04. மடிக்கணினி - திரு.செ.ரவீந்திரன் அவர்கள் (பழைய மாணவர்)
  05. Document Camera - திரு.சிவபாதம் நிஷாந்தன் (பழைய மாணவன்)

- வடமாகாணக் கல்வி அமைச்சின் சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் ரூபா.764,000/- செலவில் நவீன மலசலகூடத் தொகுதி ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

- பாடசாலையின் மாணவர் பாராளுமன்ற அங்குரார்ப்பண நிகழ்வும் மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் 2017.04.04 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றிருந்தன. பருத்தித்துறை கோட்டக் கல்வி அதிகாரி திரு.மா.நவநீதமணி அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டிருந்ததோடு ஆசிரிய ஆலோசகர்களும் அயற் பாடசாலை அதிபர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

- பாடசாலையின் நவராத்திரி விழா மற்றும் ஒளிவிழா நிகழ்வுகள் மாணவர்களது ஈடுபாட்டோடு மிகச் சிறப்பான முறையில் நடந்தேறின. மாணவர் கலையார்வத்தைத் தூண்டும் போட்டிகளும் நடத்தப்பட்டிருந்தன.

- பாடசாலை மாணவர்களிடையே யோகாசனம் தொடர்பான அறிமுகத்தினை ஏற்படுத்தும் நிகழ்வு 2017.10.10 அன்று நடைபெற்றிருந்தது. யோகாசன விற்பன்னர் திருவாளர் ரத்தினசோதி அவர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டு அறிவுரைகளை வழங்கியிருந்தார்.

- 2017ஆம் ஆண்டுக்கான ஆசிரியர்தின விழா தவிர்க்கவியலாத சில காரணங்களினால் பிற்போடப்பட்டு 2017.10.17 அன்று பழைய மாணவர் சங்கத்தினரது கூடுதலான அனுசரணையோடும் விமரிசையான ஏற்பாடுகளோடும் மிகச் சிறப்பாக

நடைபெற்றிருந்தது. யா/நெல்லியடி மத்திய கல்லூரியின் ஓய்வுநிலை அதிபரும் "SERVE Foundation" அமைப்பின் பணிப்பாளருமான கலாநிதி. செ. சேதுராஜா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தார்.

- எமது பாடசாலையின் புவியியல் பாட ஆசிரியர் திருமதி.சுதா சுதாகரன் அவர்கள், மகாண மட்டத்திலான "நல்லாசிரியர் விருது" வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.
- மாணவர் நலன் பேணும் வகையில் கல்வி அமைச்சு, இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் அனுசரணையோடு செயற்படுத்திவரும் "சுரக்ஷா" மாணவர் காப்புறுதியின் அறிமுக நிகழ்வு 2017.12.07 அன்று எமது பாடசாலையிலும் சிறப்பாக நடைபெற்றது.
- 2018ஆம் ஆண்டுக்கான தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள்விழாவும் மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் 2018.01.15 அன்று சிறப்பாக நடைபெற்றிருந்தன. வடமராட்சி கல்வி வலய புவியியல்பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி.க. கிருஷ்ணசிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டிருந்தார்.
- பாடசாலையின் முகாமைத்துவத் தேவைகளுக்காக செயற்றிறன் மிக்க புதிய தலைமுறைக் கணினித் தொகுதி ஒன்று ரூபா.156,000/- செலவில் பாடசாலையின் முன்னாள் ஆசிரியரான அமரர் தம்பிராசா காசிநாதர் அவர்களின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரால் இன்றைய தினம் அன்பளிப்புச் செய்யப்படவுள்ளது.
- புலம்பெயர் நாடுகளிலும் உள்நாட்டிலும் வதியும் பாடசாலையின் பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் மனமுவந்த நிதிப் பங்களிப்போடு 2.1 மில்லியன் ரூபா நிதி முறையான சட்ட ஒழுங்குகளோடு உறுதி செய்யப்பட்டு வங்கிகளின் நிலையான வைப்புக்களில் இடப்பட்டு, அவற்றின் வருடாந்த வட்டித் தொகைகளைக் கொண்டு பரிசளிப்பு விழா, விளையாட்டுப் போட்டி நிகழ்வு, நவராத்திரி விழா என்பவற்றை நடத்துவதற்கும் அவசிய அபிவிருத்தித் தேவைகளை நிறைவு செய்வதற்குமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்காக முன்னின்று உழைத்த அனைத்து நல்லுள்ளங்களும் நன்றியோடு நினைவுகூரப்பட வேண்டியவர்களே!


இவற்றைவிடவும் பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு கிடைக்கப்பெற்ற நிதி, பொருள் உதவிகள் தொடர்பான விபரங்கள் பின்னிணைப்பாக வழங்கப்பட்டுள்ளன.

எமது பாடசாலையின் கல்விப் பெறுபேறுகள் திருப்திகரமான முறையில் அமைந்து வருகின்றன. கிராமியப் பாடசாலையாக அமைந்துள்ள எமது பாடசாலையில் கற்கவரும் மாணவர்களின் கள நிலைமைகளைக் கருத்திற்கொண்டு பார்க்கையில் எமது மாணவர்கள் பொதுப் பரீட்சைகளில் பெற்றுவரும் அடைவுகள் திருப்திகரமானதாக அமைவதனை அவதானிக்கமுடியும். க.பொ.த.(சா/த)ப் பரீட்சை - டிசெம்பர், 2016 இன் சிறந்த பெறுபேறுகளாக,

| | | |
|---|---|---|
| 1. | S.JEKATHEESAN | 8A, 1B |
| 2. | S.ANOJAN | 4A, 4B, 1C |
| 3. | M.RAGITHA | 3A, 4B, 2C |
| 4. | J.NITHARSINI | 5A, 2B, 2S |
| 5. | R.KISHALINI | 4A, 3C, 2S |
| 6. | T.THEVARAGI | 2A, 4B, 1C, 2S |

7. M.VITHUSHA 1A, 3B, 4C, 1S
8. A.KASHTO 2A, 1B, 4C, 2S
9. V.DENSIGA 2A, 2B, 2C, 2S
10. S.THAYARATHAN 2A, 1B, 2C, 3S
11. S.DERNIKA 1A, 2B, 2C, 2S
12. M.MERIRANSANA 1A, 1B, 4C, 1S
13. A.NITHARSHAN 1A, 2B, 1C,3S
14. A.AMIRTHA 2B, 2C, 4S
15. R.PIRATHEEP 2B, 1C, 4S
16. M.NALAYINI 4C, 4S *என்பன அமைந்துள்ளன.*

**க.பொ.த.(சா.த)ப் பரீட்சை கடந்த 5 ஆண்டு காலமும் எதிர்பார்க்கையும் க.பொ.த.(உ.த)இற்குத் தகுதி பெற்றோர்**



| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|
| தோற்றியோர் | 27 | 20 | 31 | 23 | 25 | 27 |
| சித்தி பெற்றோர் | 18 | 13 | 16 | 16 | 18 | 17 |
| சதவீதம் | 67 | 65 | 52 | 70 | 72 | 63 |

*இவ்வாறே தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை - **2017** இல் எமது பாடசாலை மாணவர்கள் **4** பேர் வெட்டுப்புள்ளிக்கு மேலான புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த அதேவேளை **6** மாணவர்கள் **100** புள்ளிகளுக்கு மேல் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மாணவர்கள்,*

***01.*** *செல்வி.க.கம்ஷிகா* - ***176*** *புள்ளி*

***02.*** *செல்வன்.சு.சஜன்* - ***173*** *புள்ளி*

***03.*** *செல்வி.வி.சாதனா* - ***165*** *புள்ளி*

***04.*** *செல்வன்.ஐ.டிலக்சன்* - ***168*** *புள்ளி*

*பாடசாலை வகுப்புக்களுக்குப் புறம்பாக இவர்களுக்கான மேலதிக விசேட வகுப்புக்கள் வெளியிலிருந்து ஒழுங்குசெய்யப்பட்ட வளவாளர்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதற்கான நிதி அனுசரணையினை K.Laxmi & Yoga Foundation மூலமாக திரு.கந்தசாமி சிவானந்தம் அவர்கள் வழங்கியிருந்தார்.*

இணைப்பாடவிதானச் செயற்பாடுகளைப் பொறுத்தளவில் விளையாட்டுத் துறையில் எமது மாணவர்களின் அடைவுகள் திருப்திகரமாக கடந்த ஆண்டில் அமைந்திருக்கவில்லை. எமது பாடசாலையில் கல்வி கற்றுவந்த மாணவர்களில் ஒரு பகுதியினர், பலாலிப் பிரதேசத்தின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் காரணமாக கடந்த ஆண்டு ஆரம்பத்திலேயே இடைவிலகியமை இதற்கான பிரதான காரணமாகக் கருதப்படுகின்றது. எனினும் இவ்வாண்டில் விளையாட்டு நடவடிக்கைகளை வினைத்திறனுடன் முன்னெடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

*தற்போது எமது பாடசாலையிலுள்ள மாணவர் விபரம் :*

| மாணவர் விபரம் - 2018 | | | |
|---|---|---|---|
| **வகுப்பு** | **ஆண்கள்** | **பெண்கள்** | **மொத்தம்** |
| **தரம் - 1** | 12 | 05 | **17** |
| **தரம் - 2** | 12 | 10 | **22** |
| **தரம் - 3** | 11 | 12 | **23** |
| **தரம் - 4** | 06 | 07 | **13** |
| **தரம் - 5** | 08 | 12 | **20** |
| **தரம் - 6** | 13 | 06 | **19** |
| **தரம் - 7** | 09 | 19 | **28** |
| **தரம் - 8** | 13 | 10 | **23** |
| **தரம் - 9** | 10 | 09 | **19** |
| **தரம் - 10** | 12 | 09 | **21** |
| **தரம் - 11** | 10 | 07 | **17** |
| **தரம் - 11 R** | 09 | 15 | **24** |
| **மொத்தம்** | **125** | **121** | **246** |

| வகுப்புப் பிரிவுரீதியான எண்ணிக்கை | | | |
|---|---|---|---|
| **பிரிவு** | **ஆண்கள்** | **பெண்கள்** | **மொத்தம்** |
| **முதன்மை நிலை – 1** | 24 | 15 | **39** |
| **முதன்மை நிலை – 2** | 17 | 19 | **36** |
| **முதன்மை நிலை – 3** | 08 | 12 | **20** |
| **தரம் 6 – 9** | 45 | 44 | **89** |
| **தரம் 10 – 11** | 31 | 31 | **62** |
| **மொத்தம்** | **125** | **121** | **246** |

தற்டீபாது பணியிலுள்ள அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்களின் விபரம்

| NO | NAME OF TEACHER | QUALIFICATION | GRADE | First App.Date | App.Date To This School |
|---|---|---|---|---|---|
| 01 | ***Mr.V.Indiralingam (Principal)*** | *Trd.(Science), B.Ed.* | **SLPS - 2** | 1990.03.28 | 2016.06.06 |
| 02 | ***Mr.V.Suthershan (Assist. Principal)*** | *Trd.(Maths), B.Ed.* | **SLPS - 3** | 1996.01.01 | 2017.01.02 |
| 03 | ***Mrs.J.Ganesalingam*** | *G.C.E.(A/L), Trd.(Primary)* | SLTS - 1 | 1988.08.17 | 2012.01.10 |
| 04 | ***Mr.K.Suthagaran*** | *BSc. , PGDE, Trd.(Maths)* | SLTS 2 - I | 1997.01.02 | 2016.01.06 |
| 05 | ***Mrs.K.Sriragavan*** | *G.C.E.(A/L), Trd.(Sci.)* | SLTS - 1 | 1988.08.17 | 2010.05.10 |
| 06 | ***Mrs.J.Vijayaratnam*** | *Trd.(Primary), B.Com, PGDE* | SLTS - 1 | 2000.01.03 | 2010.03.01 |
| 07 | ***Mr.K.Santhirakumar*** | *G.C.E.(A/L), Dip.In.Teach.* | SLTS 2 - II | 2007.08.03 | 2013.02.18 |
| 08 | ***Mr.S.Priyankan*** | *G.C.E.(A/L),Trd.(Phy.Ed.)* | SLTS 2 - II | 2005.03.01 | 2014.01.02 |
| 09 | ***Mr.S.Balamurali*** | *M.A., PGDE* | SLTS 2 - II | 2005.03.01 | 2014.03.24 |
| 10 | ***Mrs.J.Sasitharan*** | *G.C.E.(A/L), Trd.(Primary)* | SLTS 2 - I | 2000.01.03 | 2015.02.16 |
| 11 | ***Mr.G.Anuraharan*** | *H.N.D.A* | SLTS 2 - II | 2008.11.24 | 2009.12.29 |
| 12 | ***Mrs.A.Prasanna*** | *G.C.E.(A/L), Dip.In.Teach.* | SLTS 3 - I | 2007.09.12 | 2015.04.01 |
| 13 | ***Mrs.T.Kiritharan*** | *G.C.E.(A/L), Trd.(Primary)* | SLTS 2 - II | 2005.03.03 | 2015.05.11 |
| 14 | ***Mrs.J.Kannathasan*** | *PGDE, M.Ed.* | SLTS - 1 | 1996.12.23 | 2016.01.31 |
| 15 | ***Mrs.S.Suthagaran*** | *B.A.(Hons.)(Eco.Spe.) M.Ed.* | SLTS 2 -II | 2005.09.13 | 2016.01.01 |
| 16 | ***Mrs.S.Thayaparan*** | *G.C.E.(A/L), Dip.In.Teach.* | SLTS 3 - I | 2006.07.25 | 2017.01.02 |
| 17 | ***Mrs.J.Akilan*** | *PGDE, B.A* | | | |
| 18 | ***Mrs.J.Pradeepan*** | *Dip.In.Teach., B.Ed.(Eng.)* | SLTS 2 - I | 2006.05.02 | 2017.01.02 |
| 19 | ***Mr.S.Somachandran (2 Days)*** | *G.C.E.(A/L), Trd.(ABT)* | SLTS 2 - II | 2005.03.07 | 2015.04.21 |
| 20 | ***Mr.S.Ragulan (2 Days)*** | *BA., Art.Trd.* | SLTS 2 - I | 2000.01.03 | 2015.04.20 |
| 21 | ***Mrs.K. Pakeerathan (2 Days)*** | *G.C.E.(A/L), Dip.In.Teach.* | SLTS 3 - I | 2007.08.03 | 2017.01.03 |
| 22 | ***Mrs.S.Pancharatnam (2 Days)*** | | | | |

*23.* திரு.ச.கௌரீஸ்வரன் - பாடசாலைப் பணியாளர்
*24.* திரு. வனதீபன் - காவலாளி

## பாடசாலை முகாமைத்துவக்குழு (2017)

*01.* திரு. வீ.இந்திரலிங்கம் - அதிபர்
*02.* திரு.வீ.சுதரசன் - உதவி அதிபர்
*03.* திருமதி. ஜெ. கணேசலிங்கம் - பகுதித்தலைவர்
*04.* திரு. க. சுதாகரன்
*05.* திருமதி. சு. சுதாகரன்
*06.* திரு. சி. சந்திரகுமார்
*07.* திரு. சா. பிரியாங்கன்
*08.* திரு. சி. பாலமுரளி

## பாடசாலை அபிவிருத்திக் குழு (2017) அங்கத்தவர்களின் விபரம் :

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | திரு. வீ.இந்திரலிங்கம்(அதிபர்) |
| செயலாளர் | :- | திரு. ப. பாரதிநாதன்(பெற்றோர்) |
| பொருளாளர் | :- | திருமதி. ஜெ. கணேசலிங்கம்(ஆசிரியர்) |
| ஆசிரியர் பிரதிநிதிகள் | :- | திரு. க. சுதாகரன் |
| | | திருமதி. சு. சுதாகரன் |
| | | திரு. சா. பிரியாங்கன் |
| பெற்றோர் பிரதிநிதிகள் | :- | திரு. P. ஜோர்ஜ் |
| | | திரு. கிருஷ்ணராசா |
| | | திரு. த. செல்வநாதன் |
| வலயக்கல்விஅலுவலகபிரதிநதி | :- | திரு. M. சாள்ஸ்(ஆசிரியஆலோசகர்) |
| பழையமாணவர் பிரதிநிதிகள் | :- | செல்வி. சி. கவிப்பிரியா |
| | | செல்வி. A.மேரிறெக்சனா |

## கட்டாயக் கல்விக்குழு (2017)

*01.* திரு. வீ.இந்திரலிங்கம் (அதிபர்)
*02.* திரு.வீ.சுதர்சன் (உதவி அதிபர்)
*03.* திருமதி. ஜெ. கணேசலிங்கம் (பகுதித் தலைவர்)
*04.* திரு. சி. பாலமுரளி (ஆசிரியர்)
*05.* திரு. ம. தர்சாந்தன் (கிராமஅலுவலர்)
*06.* திருமதி. யஸ்மின் குருஸ் அமலயூலியற் (சமுர்த்திஉத்தியோகத்தர்)
*07.* பொலிஸ் பிரதிநதிஒருவர்
*08.* திரு. P. ஜோர்ஜ் (பெற்றோர் பிரதிநிதி)
*09.* திரு. கி. கிருபாகரன் (பெற்றோர் பிரதிநிதி)
*10.* செல்வி. அ. மேரிறஞ்சனா (பழையமாணவர்)
*11.* செல்வி. சி. கவிப்பிரியா (பழையமாணவர்)

| யா/பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை - வருடாந்த பரிசளிப்பு விழா 2017 | | | |
|---|---|---|---|
| **பரிசு பெறுவோர் விபரம்** | | | |
| **தொ.இல.** | **பெயர்** | **வகுப்பு** | **பரிசுக்கு உரியவை** |
| 01 | செல்வன்.ஐ.விதுஷன் | தரம் 1 | தமிழ், சுற்றாடல், வகுப்பு நிலை - 1 |
| 02 | செல்வி. ஜெ.அனுஷா | தரம் 1 | சைவசமயம், கணிதம், வகுப்பு நிலை - 2 |
| 03 | செல்வன். செ.அனோஜன் | தரம் 1 | வகுப்பு நிலை - 3, வரவு ஒழுங்கு |
| 04 | செல்வன். பி.சபினூஸ் | தரம் 1 | கத்தோலிக்கத் திருமறை |
| 05 | செல்வி.ய.கேஷனா | தரம் 2 | தமிழ், கணிதம், சுற்றாடல், சைவசமயம், வகுப்பு நிலை - 1, வரவு ஒழுங்கு |
| 06 | செல்வி.அ.கம்ஷா | தரம் 2 | வகுப்பு நிலை - 2 |
| 07 | செல்வன்.செ.சஞ்சய் | தரம் 2 | கத்தோலிக்கத் திருமறை |
| 08 | செல்வி.கி.லக்ஷனா | தரம் 2 | வகுப்பு நிலை - 3 |
| 09 | செல்வி.தி.சகானா | தரம் 3 | சுற்றாடல், ஆங்கிலம், கணிதம், சைவ சமயம், வகுப்பு நிலை - 1 |
| 10 | செல்வன்.ஸ்ரீ.சரவணன் | தரம் 3 | தமிழ், வகுப்பு நிலை - 2, வரவு ஒழுங்கு. |
| 11 | செல்வி.றெ.நிஷாலினி | தரம் 3 | கிறிஸ்தவம் |
| 12 | செல்வன்.ஐ.ஐதுசன் | தரம் 3 | வகுப்பு நிலை 3 |
| 13 | செல்வி.கி.சரன்ஜா | தரம் 4 | தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சைவசமயம், வகுப்புநிலை - 1 |
| 14 | செல்வி.இ.சுருதி | தரம் 4 | வகுப்புநிலை - 3, வரவு ஒழுங்கு |
| 15 | செல்வி.ச.யதுசா | தரம் 4 | வகுப்புநிலை - 2 |
| 16 | செல்வி.ஆ.ஐதுசனா | தரம் 4 | சைவசமயம் |
| 17 | செல்வி.த.நிரஞ்சனா | தரம் 4 | கத்தோலிக்கத் திருமறை |
| 18 | செல்வி.க.கம்சிகா | தரம் 5 | ஆங்கிலம், வகுப்பு நிலை - 1, வரவு ஒழுங்கு, புலமைப்பரிசில் பரீட்சை சித்தி |
| 19 | செல்வன்.சு.சஜன் | தரம் 5 | தமிழ், வகுப்புநிலை - 2, வரவு ஒழுங்கு, புலமைப்பரிசில் பரீட்சை சித்தி |
| 20 | செல்வி.வி.சாதனா | தரம் 5 | சைவசமயம், கணிதம், வரவு ஒழுங்கு புலமைப்பரிசில் பரீட்சை சித்தி |
| 21 | செல்வன்.ஐ.டிலக்ஷன் | தரம் 5 | சுற்றாடல், வகுப்பு நிலை - 3, புலமைப்பரிசில் பரீட்சை சித்தி |
| 22 | செல்வன்.ஸ்ரீ.கஜராஜ் | தரம் 5 | புலமைப்பரிசில் பரீட்சை 100 புள்ளிக்கு மேல், வரவு ஒழுங்கு |
| 23 | செல்வி.கு.கீர்த்தனா | தரம் 5 | புலமைப்பரிசில் பரீட்சை 100 புள்ளிக்கு மேல், வரவு ஒழுங்கு |
| 24 | செல்வி.பி.நிவேதா | தரம் 5 | புலமைப்பரிசில் பரீட்சை 70 புள்ளிக்கு மேல், கத்தோலிக்கத் திருமறை |
| 25 | செல்வன்.கி.கிருஷாந் | தரம் 5 | புலமைப்பரிசில் பரீட்சை 100 புள்ளிக்கு மேல் |

| தொ.இல. | பெயர் | வகுப்பு | பரிசுக்கு உரியவை |
|---|---|---|---|
| 26 | செல்வன்பிபிருந்தன் | தரம் 5 | புலமைப்பரிசில் பரீட்சை 100 புள்ளிக்கு மேல் |
| 27 | செல்வி.ஜெ.அபிஷா | தரம் 5 | புலமைப்பரிசில் பரீட்சை 100 புள்ளிக்கு மேல் |
| 28 | செல்வி.கு.நிஷாலினி | தரம் 5 | புலமைப்பரிசில் பரீட்சை 100 புள்ளிக்கு மேல் |
| 29 | செல்வன்.ஞா.சத்தியசொரூபன் | தரம் 5 | புலமைப்பரிசில் பரீட்சை 70 புள்ளிக்கு மேல் |
| 30 | செல்வி.மு.சுவேதா | தரம் 5 | புலமைப்பரிசில் பரீட்சை 70 புள்ளிக்கு மேல் |
| 31 | செல்வன்.சி.காலேப் | தரம் 5 | புலமைப்பரிசில் பரீட்சை 70 புள்ளிக்கு மேல் |
| 32 | செல்வி.ப.வின்சிகா | தரம் 6 | தமிழ், வரலாறு, புவியியல், குடியியல், சுகாதாரம், செ.மு.தொ.நு., சைவசமயம், வகுப்பு நிலை - 1 |
| 33 | செல்வி.கி.நிம்சனா | தரம் 6 | ஆங்கிலம், கணிதம், தமிழ், சங்கீதம், வகுப்பு நிலை - 2, வரவு ஒழுங்கு |
| 34 | செல்வி.ப.பவித்திரா | தரம் 6 | விஞ்ஞானம், கத்தோலிக்கத் திருமறை, வகுப்பு நிலை - 3 |
| 35 | செல்வன்.அ.அஜந்தன் | தரம் 6 | சித்திரம் |
| 36 | செல்வி.யோ.ஜிந்துசா | தரம் 6 | நடனம் |
| 37 | செல்வன்.யோ.சஞ்சய் | தரம் 6 | Creative Writing- **2nd** Place in Divisional Level (Point Pedro) |
| 38 | செல்வி.பி.பிரியந்தி | தரம் 7 | சைவசமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், புவியியல், சுகாதாரம், ஆங்கிலம், வகுப்பு நிலை - 1<br>English Dictation -**1st** Place in Divisional Level (Point Pedro) |
| 39 | செல்வி.ச.திவ்வியா | தரம் 7 | குடியியல், செ.மு.தொ.நு., வகுப்பு நிலை - 2, வரவு ஒழுங்கு.<br>Creative Writing- **3rd** Place in Divisional Level (Point Pedro) |
| 40 | செல்வி.ச.வனஜா | தரம் 7 | வரலாறு, சங்கீதம், வகுப்பு நிலை - 3 |
| 41 | செல்வன்.ப.நவீனன் | தரம 7 | சித்திரம் |
| 42 | செல்வி.அ.அருள்ராணி | தரம் 7 | கத்தோலிக்கத் திருமறை |
| 43 | செல்வன்.வி.விஷ்ணுவர்த்தன் | தரம் 7 | Reading - **3rd** Place in Divisional Level (Point Pedro) |
| 44 | செல்வன்.வி.செலஸ்ரீன் | தரம் 8 | கத்தோலிக்கத் திருமறை, தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியியல், சுகாதாரம், செ.மு.தொ.நு., வகுப்பு நிலை - 1<br>சமூக விஞ்ஞானப் போட்டி - வலய மட்டம் - 2ம் இடம் |

| தொ.இல. | பெயர் | வகுப்பு | பரிசுக்கு உரியவை |
|---|---|---|---|
| 45 | செல்வி.ர.சிந்துஜா | தரம் 8 | சைவசமயம், கணிதம், சங்கீதம், வகுப்பு நிலை - 2, வரவு ஒழுங்கு Creative Writing- **1st** Place in Divisional Level (Point Pedro) |
| 46 | செல்வன்.ம.சிபிராஜ் | தரம் 8 | சித்திரம், வரவு ஒழுங்கு |
| 47 | செல்வி.கு.திவானிகா | தரம் 8 | வகுப்பு நிலை - 3 |
| 48 | செல்வி.ச.சஞ்சிகா | தரம் 8 | வரவு ஒழுங்கு |
| 49 | செல்வி.வி.தினுஷா | தரம் 8 | வரவு ஒழுங்கு |
| 55 | செல்வி.ம.மதுஷா | தரம் 8 | நடனம் |
| 50 | செல்வன்.கு.கிருஷன் | தரம் 9 | தமிழ், ஆங்கிலம், புவியியல், சுகாதாரம், செ.மு.தொ.நு., விஞ்ஞானம், வரலாறு, வகுப்பு நிலை - 2 |
| 51 | செல்வன்.சா.வாகீசன் | தரம் 9 | சைவசமயம், குடியியல், சங்கீதம், கணிதம், வகுப்பு நிலை - 1 |
| 52 | செல்வி.உ.சினேகா | தரம் 9 | Dictation - **1st**, Reading - **3rd** in Divisional Level (Point Pedro) |
| 53 | செல்வன்.ஜெ.சங்கீதன் | தரம் 9 | சித்திரம், வரவு ஒழுங்கு |
| 54 | செல்வி.றூபின் அனிஸ்ரா | தரம் 9 | கத்தோலிக்கத் திருமறை |
| 56 | செல்வன்.பா.பவித் | தரம் 9 | வகுப்பு நிலை -3 |
| 57 | செல்வன்.றொ.கிருஷாந்தன் | தரம் 9 | வரவு ஒழுங்கு |
| 58 | செல்வன்.மு.சங்கீதன் | தரம் 10 | சைவ சமயம், வரலாறு, சுகாதாரம், இலக்கியநயம்(தமிழ்), வகுப்பு நிலை - 2 |
| 59 | செல்வி.அ.டெசி | தரம் 10 | கத்தோலிக்கத் திருமறை, தமிழ் மொழியும் இலக்கியமும், புவியியல், சங்கீதம், வகுப்பு நிலை -3 |
| 60 | செல்வன்.யோ.டசியந்தன் | தரம் 10 | கணிதம், வகுப்பு நிலை - 1, வரவு ஒழுங்கு |
| 61 | செல்வன்.ஜெ.ஜெயமோகன் | தரம் 10 | த.தொ.தொ.நு., ஆங்கிலம் |
| 62 | செல்வி.ஆ.கிருத்திகா | தரம் 10 | முயற்சியாண்மை |
| 63 | செல்வன்.S.சுபாஸ் | தரம் 10 | சித்திரம் |
| 64 | செல்வன்.சி.டிலக்ஷன் | தரம் 10 | கடல்நீர் உயர்வளத் தொ.நு. |
| 65 | செல்வன்.அ.தேனிலவன் | தரம் 10 | வரவு ஒழுங்கு |
| 66 | செல்வி.ச.சயந்தினி | தரம் 11 | கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், த.தொ.தொ.நு., வகுப்பு நிலை - 2 Copy Writing - **2nd** Place in Divisional Level (Point Pedro) |
| 67 | செல்வன்.வி.வாரணன் | தரம் 11 | சைவசமயம், தமிழ் மொழியும் இலக்கியமும், வர்த்தகம், சுகாதாரம், வகுப்பு நிலை - 3 |
| 68 | செல்வன்.இ.கிருஷனன் | தரம் 11 | வரலாறு, புவியியல், இலக்கிய நயம் (தமிழ்), வகுப்பு நிலை - 1 |
| 69 | செல்வி.ப.பிரியங்கா | தரம் 11 | சங்கீதம், வரவொழுங்கு |
| 70 | செல்வன்.லூ.அஜித்குமார் | தரம் 11 | சித்திரம் |
| 71 | செல்வன்.ஜூலியஸ் றெக்ஷன் | தரம் 11 | கடல்நீர் உயர்வளத் தொ.நு. |
| 72 | செல்வன்.து.ஜெனுசன் | தரம் 11 | கத்தோலிக்கத்திருமறை |
| 73 | செல்வி.த.றெக்ஸனா | தரம் 11 | Recitation - **3rd** Place in Divisional Level (Point Pedro) |

## நிதியங்களுக்கான நிதியுதவி மற்றும் பொருள் அன்பளிப்புச் செய்தோர் விபரம்

| ஆண்டு | அன்பளிப்பு வகை | வழங்குனர் |
|---|---|---|
| 2016 | நிலையானவைப்பு - ரூபா -200,000<br>(பரிசளிப்பு) | கந்தசாமி ஜெயசந்திரன் ஞாபகார்த்தஅறக்கட்டளைநிதியம். (திருமதி யசோதை திருக்குமரன்) |
| | நிலையானவைப்பு- ரூபா 200,000<br>(பரிசளிப்பு) | செல்லையாகமலாதேவிஞாபகார்த்தநிதியம்<br>1. சிவபாதம் சிவனேஸ்வரன்<br>2. சிவபாதம் ஜெயாபரன்<br>3. திருமதிசுவிற்றாசபாஜிதன்<br>4. திருமதி ஜெயகௌரிரவிசங்கர் |
| | நிலையானவைப்பு ரூபா 100,000<br>(விளையாட்டுப்போட்டி) | திருமதிகதிர்காமத்தம்பிபுனிதவதிநிதியம். |
| 2017 | நிலையானவைப்பு ரூபா 300,000<br>(நவராத்திரி)<br>2017 நவராத்திரிவிழாஅன்பளிப்பு 30,000 | தம்பிராசாசீவரத்தினம் ,,தம்பிராசாகாசிநாதர் குடும்பஅறக்கட்டளைநிதியம் |
| | நிலையானவைப்பு ரூபா 200,000<br>(விளையாட்டுப்போட்டி) | திருமதிசாந்தகுமார் பாசமலர் ஞாபகர்த்தநிதியம்<br>திருமதி கிருஷ்ணப்பிள்ளை தங்கம்மா குடும்பம் |
| | நிலையானவைப்பு ரூபா 100,000<br>(பரிசளிப்பு) | செல்லக்கண்டுவள்ளிநாயகிஞாபகார்த்தநிதியம் - திருசிவஞானசேகரம் |
| | நிலையானவைப்பு ரூபா 800,000<br>(பாடசாலைச் செயற்பாடுகள்) | பாலாவிukநிதியம் |
| | நிலையானவைப்பு ரூபா 200,000<br>(பாடசாலைச் செயற்பாடுகள்) | பழையமாணவர் சங்கம் |
| | நிதியுதவி - தரம் 05 , தரம் 11 பொதுப்பரீட்சைகளின் அடைவுமட்ட அதிகாிப்புச் செயற்பாடுகள் ரூபா 210,000 | K.லக்சுமி & யோகநிதியம் (கந்தசாமிசிவானந்தம்) |
| | ஆசிரியர் தினஅன்பளிப்பு ரூபா 25,000<br>விளையாட்டுப்போட்டிஅன்பளிப்பு ரூபா100,000 | பழையமாணவர் சங்கம் |
| | ஆராதனைமண்டபத்தின் சுவாமிப்படக்கேடக்நிதியுதவி ரூபா35,000 | உ.சோபிதாக.வானதி |
| | அலுவலகஅறிவித்தல் பலகை ரூபா 9,000 | திரு ப. பாரதிநாதன் |
| | ஒளிவிழாநிதிஅன்பளிப்பு ரூபா 5000 | கிறிஸ்தவபாடஆசிரியரின் துணைவர் அன்பளிப்புஅருட் தந்தைபஞ்சரட்ணம் |
| | காலைஉணவுஅன்பளிப்பு (30 மாணவரின் பணிஸ் ) | திருசி.பேரின்பநாதன் |
| 2018 | 2017பரிசளிப்பு விழாஅன்பளிப்பு ரூபா 10,000 | முருகுப்பிள்ளை ஜெகநாதன் |

திரு.பொ.ஜதீஸ்வரன் அவர்கள் மேடைப்பாவனைக்கான விசேட ஒலிவாங்கிச் சாதனங்கள் (Microphone) இரண்டினை வழங்கியிருந்தார்.

# பாடசாலைக் கீதம்

இராகம் : ஹம்சத்வனி
தாளம் : ஆதி

### பல்லவி

வாழிய! வாழியவே! - எங்கள்
வித்தியாசாலை நாளும் வாழியவே!

### அனுபல்லவி

சீரோங்கும் பொலிகண்டிசேர் சைவ வித்தியாசாலை
ஈசனருளால் என்றும் வாழியவே!

### சரணம்

பாலாவி வெளிதனில் - பாங்காய் உலாவி நின்று
நூல்தரு கல்விதனை நுண்ணறிவோடு தரும்
தாயாமிப் பாடசாலை - ஆனைமுகன் தம்பி சிவன்
சேயான கந்தவன நாதனருள் மேவி நின்று

- வாழிய வாழியவே....

இயற்றியவர் : பண்டிதர் சு.இராமுப்பிள்ளை